1987 நவம்பர் 18]

8. அரசினர் தீர்மானம்.

பேரவை ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் மாலை 4-53 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

107. சென்னை சமூக சேவை மையத்திற்கு சொந்தமான டி.சி.எம். 3231 எண்ணுள்ள ஜீப்பிற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள்(போ. 1) துறையின் 23—9—1959 ஆம் நாளிட்ட 2236 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

108. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20—3—1987 ஆம் நாளிட்ட (II (1)/CTRE/46 (a-6)/87)-ஆம் எண் அறிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24—7—1987 ஆம் நாளிட்ட 856 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

109. சேலம் மாவட்டம் மாவுப்பசை மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கத்தினரால் விற்கப்படும் சவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவு பசைகளுக்கு விதிக்கக்கூடிய வரியினை 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 27—8—1987 ஆம் நாளிட்ட 976 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

110. 1978—79 மற்றும் 1979—80 ஆம் ஆண்டுகளுக்கான அண்ணா பல்கலைக் கழகத்தின் தணிக்கை அறிக்கையும், கணக்குகளும், [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).]

111. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டு அறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

112. 1985-86 ஆம் ஆண்டிற்கான மின் வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1986 அன்று வரையிலான ஐந்தொகை குறிப்பு. [1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)

113. 1984-85 ஆம் ஆண்டிற்கான கதர் கிராம தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கையும், கணக்குகளும். [1959 ஆம் ஆண்டு கதர் கிராம தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

114. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் இருபத்தொன்றாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

115. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].